**People's Watch**
No.32, Besant Road, Chokkikulam, Madurai - 625 002
Phone: +91-452-2531874 & 2539520 Fax: +91-452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.peopleswatch.org

A Network Towards Human Rights Monitoring, Intervention, Campaign, Research and Documentation
(A Programme Unit of the Centre for Promotion of Social Concerns)

11.05.2017

# பத்திரிகைச் செய்தி

## மாநில குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்திற்குப் புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ள தலைவர் மற்றும் உறுப்பினர்களை குடிமைச் சமூக நிறுவனங்கள் வரவேற்பதோடு இந்த ஆணையம் வெளிப்படையாகவும், தன்னிச்சையாகவும் செயற்பட வலியுறுத்துகின்றோம்

ஓராண்டிற்கு மேலாக வெற்றிடமாக இருந்த குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தின் தலைவர் பதவிக்கு திருமிகு. நிர்மலா, இ.ஆ.ப (ஓய்வு) அவர்கள் நியமனம் செய்யப்பட்டதை மக்கள் கண்காணிப்பகம், தேசிய மற்றும் மாநில மனித உரிமை அமைப்புகளோடு இணைந்து பணியாற்றும் தன்னார்வலர்கள் அரசு சாரா அமைப்புகளின் அகில இந்திய கூட்டமைப்பு, (AiNNI) மனித உரிமைக் காப்பாளர்கள் கூட்டமைப்பு, (HRDA) மற்றும் மனித உரிமைக் கல்வி நிறுவனம் (IHRE) ஆகிய அமைப்புகள் இணைந்து வரவேற்கிறோம்.

குழந்தைகள் இலவசக் கட்டாயக் கல்வி உரிமைச்சட்டம் 2009, பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் 2012 மற்றும் தமிழகம் முழுவதும் உள்ள குழந்தைகள் பாதுகாப்பு நிறுவனங்கள் ஆகியவற்றின் செயற்பாடுகளை தீவிரமாகக் கண்காணித்து குழந்தை உரிமைகளைப் பாதுகாக்கும் பணியை மாநில குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் திறம்படச் செய்ய வேண்டுகிறோம்.

தேசிய மற்றும் மாநில மனித உரிமை நிறுவனங்களுக்கான அய்க்கிய நாட்டவையின் பாரீஸ் கொள்கையின்படி (Paris Principles) குழந்தைகள் நலத்தில் மாநில அரசு போதிய கவனம் செலுத்த அறிவுறுத்தி தன்னிச்சையான, பன்முகப்பட்ட, திறம்பட்ட, வெளிப்படையான, கட்டுப்பாடுடைய ஆணையமாகச் செயல்படவேண்டுகிறோம்.

இந்த ஆணையம் சுதந்திரமாகச் செயற்பட தமிழக அரசு ஆவன செய்ய வேண்டும். மேலும் அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளின் அதிகார வளையத்தினைத் தாண்டி இந்த ஆணையத் தலைவர் சுதந்திரமாகச் செயற்பட தமிழக அரசை வேண்டுகிறோம். இந்தியாவில் பிற மாநிலங்களோடு ஒப்பிடுகையில் தமிழ்நாட்டிலுள்ள மாநில குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு நல ஆணையத்தின் உறுப்பினர்களுக்கு குறைவான ஊதியமே வழங்கப்படுகிறது. அண்டை மாநிலமான கேரளாவில் உள்ள நடைமுறையைக் கவனத்திற் கொண்டு நல்ல ஊதியத்துடன் முழுநேர உறுப்பினர்களாக செயலாற்ற வேண்டும். தமிழகத்தில் தற்போது ஆணையத்தின் பகுதி நேர உறுப்பினர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.12,000/- ஊதியம் அளிப்பதில் எவ்விதப் பயனுமில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறோம்.

மாநிலக் குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தின் தலைமை தமிழ்நாட்டில் புத்துருவாக்கம் பெற்றுள்ளது. எனவே தமிழ்நாட்டிலுள்ள குழந்தைகளின் உரிமைகள் பாதுகாப்பு, வாழ்வு, சுதந்திரம் இவற்றை வலுப்படுத்தும் சூழலை உறுதிப்படுத்தி ஆணையத்தின் தலைவர் செயற்படுவார் என நம்புகிறோம்.

ஹென்றி திபேன்
நிர்வாக இயக்குநர், மக்கள் கண்காணிப்பகம் மற்றும் மனித உரிமைக் கல்வி நிறுவனம் (IHRE)
தேசிய செயலர், மனித உரிமைக் காப்பாளர் கூட்டமைப்பு (HRDA) மற்றும் மாநில மனித உரிமை அமைப்புகளோடு இணைந்து பணியாற்றும் தன்னார்வலர்கள் அரசு சாரா அமைப்புகளின் அகில இந்திய கூட்டமைப்பு (AiNNI)